வகுப்பு : முதலாம் ஆண்டு தமிழ்

பாடம் : தமிழ் இலக்கிய வரலாறு

பாடம் எண் : 16AACTA2

# சங்க இலக்கியங்கள்

## எட்டுத்தொகை நூல்கள்

## குலசேகர ஆழ்வாரின் பக்திச் சிறப்பு

பக்தி இலக்கியம் என்பது மக்களைப் பாடாது இறைவனைப் பாடுவது. இறைவனைப் பாடுவது என்பது இறை அனுபவத்தையும் பாடுவதாகும். பக்தி இலக்கியங்கள் தோன்றுவதற்கு முற்பட்ட காலத்தில் பக்தி உணர்வு இல்லையென்று கூறமுடியாது. அன்பின் முதிர்ச்சியாகிய ஆர்வம் பக்தி என்ற பொருளில் வழங்கி வந்துள்ளது.

குழந்தை தாயிடம் காட்டுவது அன்பு. பக்தர்கள் இறைவனிடம் காட்டுவதும் இதைப்போன்ற அன்புதான். ஆனால் பக்தர்கள் அவர்களின் அன்பினைக் காட்டும்பொழுது உச்சநிலைக்குச் சென்று உருமாறி பக்தியாக உருவெடுக்கிறது.

"இறையன்பு அல்லது பக்தி என்பது இறைவனின் கல்யாண குணங்களைப் பல படியாகப் புகழ்தல், அவனுடைய முருகியல் அழகில் ஈடுபடுதல், அவனை வழிபடுவதில் இன்பங்காணல், ஓயாது அவனை நினைத்தல், தொண்டு செய்வதில் ஈடுபடுதல், இறைவனை நண்பனாகவே நினைத்தல், இறைவனைத் தந்தையாக நினைத்தல், இறைவனைக் கணவனாகவே நினைத்தல், இறைவனைக் குழந்தையாக நினைத்தல், இறைவனிடம் முழுவதுமாக அமிழ்ந்துவிடல்? அவனைப் பிரிய நேரிடின் அதற்காகப் பெரிதும் வருந்துதல்" என்ற பதினொன்று வழிகளில் வெளிப்படுகிறது என்பர். மேற்கூறப்பட்ட தன்மைகளில் பலவற்றை குலசேகர ஆழ்வார் பாடல்களில் நாம் காண்கிறோம். இவ்வியல் ஆழ்வாரின் பக்தித் திறனையும் அதனால் வெளிப்பட்ட பாடல் தன்மைகளையும் விளக்குகிறது.

Scanned with CamS

தாய்மைப் புலம்பல்!

உலகத்தில் பல்வேறு உயிர்கள் பிறப்பெடுத்து உயிர்வாழ்கின்றன. அவ்வுயிர்களை ஈன்று தியாகத்தின் வடிவமாக அன்பின் சொரூபமாகத் திகழ்வது அவ்வுயிர்களின் தாய். அச்சிறப்புக் கருதித்தான் மாதா, பிதா, குரு, தெய்வம் என்பதில் தெய்வத்தைக்கூட மாதாவிற்கு பின்னர்தான் வைத்துள்ளனர் முன்னோர். "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்பார் ஔவையார். இத்தகு பெருமைகளுக்கு உரியவள் தாய். அந்தத் தாயாக தன்னை பாவித்துப் பாடி உள்ளார் ஆழ்வார்.

கண்ணனைப் பெற்றெடுத்த தாயான தேவகி வாழ்க்கையில் எல்லா இன்பங்களையும் இழந்தவள். அத்துடன் கண்ணனின் குழந்தைப் பருவக் குறும்புகளைக் கண்டு களிக்கும் மகிழ்வையும் இழந்தவள். இந்த தேவகியாக குலசேகரர் தம்மை உருமாற்றிக் கொள்கிறார். கண்ணனை அடிக்கவும், கயிற்றால் கட்டவும், அவன் செய்யும் குறும்புகளைக் கண்டு மகிழும் வாய்ப்புப் பெற்றவள் யசோதை. அவள் மீது தேவகி பொறாமை கொள்வதாகவும் கண்ணனின் சிறுபருவத்து விளையாட்டுக்களை மனத்தால் மட்டும் பார்த்து மகிழ்ந்து நடப்பு வாழ்க்கையில் கிடைக்காததால் ஏங்கவும் செய்யும் தேவகியாகவும் நின்று பாடுகிறார்.

"கனிநிலா வெழில் மதிபுரை முகமும் கண்ணனே
திண் கைமார்வும் திண் தோளும்
தளிர்மலர்க் கருங்குழல் பிறையதுவும் தடம்
கொள் தாமரைக்கண்களும் பொலிந்த"

என்று வேதனையுடன் பாடுகிறார்.

நாயக நாயகி பாவ வெளிப்பாடு:

பெண்ணின் கற்புநெறி போற்றி நாயகன் நாயகி பாவத்தை விளக்கும் போக்கிலும் பாடல் பாடியுள்ளார். பிறர் கண்டு இகழ்ந்து பேசும்படி தன் கணவன் செய்தாலும் கொண்ட கணவனை அல்லாது வேறு ஒருவனை அறியாத குலமகள் போல, என்னை நீ ஆட்கொண்டு, ஏற்று அருளாவிட்டாலும் உன் திருவடி களையே சரணமாகக் கொள்வேன் என்கிறார். இதனை,

"கண்டார் இகழ்வனவே காதலன்தான் செய்திடினும்
கொண்டானை யல்லால் அறியாக் குலமகள்போல்
விண்தோய் மதிள்புடைசூழ் வித்துவக் கோட்டம்மாநீ
கொண்டாளா யாகிலுமுன் குரைகழலே கூறுவனே"

எனும் இப்பாடல் மூலம் அறிகிறோம்.

விண்ணப்பம்:

தன் எண்ணங்களை அறிவித்துக் கொள்வதை விண்ணப்பம் என்பர். தனக்கும் மேலானவர்களுக்கு தன் எண்ணங்களை அறிவித்துக்கொள்ள பயன்படுவதே விண்ணப்பம் என்பதாகும். "விண்ணப்பத்தில் மனக்கருத்தையும், வேட்கையையும், குறைகளையும் கூட சுட்டிக்காட்டுவது உண்டு என்பர்".

இராமலிங்க அடிகளார் பிள்ளைச் சிறு விண்ணப்பத்தில் தன் பிழையை எண்ணிப் பார்க்கிறார். எண்ணிய பிழைகளை இறைவனிடம் கூறுகிறார். தன்னைக் கைவிட வேண்டாம் என்று வேண்டுகிறார்.

இவர்களைப் போன்றே ஆழ்வாரும் இறைவனின் திருப்பதிகளுள் தலைமை சான்ற பதியான வேங்கடமலையில் ஏதேனும் ஒன்றாகக்கூட நான் இருந்தால் போதும், எந்த உயிராகப் பிறந்தாலும் போதும் என்று விண்ணப்பித்து தன் இறை பக்தியை வெளிக்காட்டுகிறார். ஆழ்வாரின் விண்ணப்பம் வேட்கை விண்ணப்பமாக உள்ளது. இவையாவும் பக்தி மார்க்க நிலையிலே அமைந்துள்ளன. திருஅரங்கன் அடி இணைமீது தனிப்பெரும் பித்தனாய் பக்திகொண்ட கொங்கர்கோன் குலசேகர ஆழ்வார். ஏழு எருதுகளையும் வென்ற எம்பிரானுக்கு அடிமை செய்வதையே நான் வேண்டுவதல்லாமல் உடலில் சதைப்பற்று பெருக்கும் செல்வத்தையுடைய இந்த உடலைத் தாங்கும் பிறவி நான் இனி விரும்பமாட்டேன். வளைந்த பாஞ்ச சந்யத்தை இடது கையில் தாங்கிய இறைவனுடைய திருவேங்கடமலையில் திருக்கோனேரியில் வாழும் நாரையாகாவது பிறக்க வேண்டும் என்கிறார்.

இம்மண்ணுலகை ஆளும் அரசும் விரும்ப மாட்டேன், திருவேங்கடமலையில் உற்பத்தியாகும் சுனைகளில் மீனாகப் பிறக்கும் பேற்றினை உடையவனாகக் கடவேன் என்கிறார். மேலும்,

"பண்பகரும் வண்டினங்கள் பண்பாடும் வேங்கடத்து
செண்பகமாய் நிற்கும் திருவுடையே னாவேனே"

என்றும்,

"எம்பெருமானீசன் எழில் வேங்கட மலைமேல்
தம்பகமாய் நிற்கும் தவமுடையே னாவேனே"

என்றும் பாடுகிறார்.

இறுதியில்,

"நெடியானே வேங்கடவா நின்கோயி லின்வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையருங் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்து உன்பவளவாய் காண்பேனே"

என்று பாடுகிறார். இதனின்று ஒவ்வொரு நொடிப் பொழுதும் அனுதினமும் இறைவன் அழகிலேயே லயித்திருக்க வேண்டும் என எண்ணி விண்ணப்பிக்கும் ஆழ்வாரின் எண்ணம் புலனாகிறது.

Scanned with CamS

ஐங்குறுநூற்றின் சிறப்பியல்பு:

எட்டுத் தொகையுள் ஒன்றாகிய ஐங்குறுநூறு தொடர்நிலைச் செய்யுளாகும். "தொடர்நிலைச் செய்யுளாவது பொருள், சொல், ஒன்றனோடு ஒன்று தொடர்புடையதாய் புனையப்படுதலாகும். இவ்வமைப்பினை இந்நூலின்கண் காணலாம். திணைக்கு நூறு பாடல்களாக மொத்தம் ஐந்நூறு பாடல்கள் உள்ளன. பாரதம் பாடிய பெருந்தேவனார் இந்நூலுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார்.

ஆசிரியப்பாவால் ஆனது அடிவரையறையாற் குறைந்த சிறிய பாடல்களில் அரிய கருத்துக்களும் பொருட்செறிவும், பயன் மிகுதியும் உடையனவாகத் திகழ்கின்றன. நான்காம் பத்தாகியத் தோழிக்குரைத்த பத்தும், எட்டாம் பத்தாகிய புனலாட்டுப் பத்தும் அந்தாதித் தொடை அமைப்பில் உள்ளது.

ஐங்குறுநூற்றில் உள்ள பத்துக்கள் யாவும் சொல்லாட்சியும், பொருளாட்சியும் கருதிப் பெயரிடப்பட்டுள்ள முறை காணப்படுகிறது. "குறுஞ் செய்யுட்களைப் படைக்கும் புலவன் குறுகிய செய்யுளினுள்ளே தான் கருதிய பொருள்களிற் பலவற்றைக் கூர்ந்து நோக்குவார்க்கு மட்டும் புலப்படும்படிப் படைத்தளிப்பான். செய்யுளில் வெளிப்படக் கிளந்த பொருள்களைக் காட்டிலும் குறிப்பாகப் பொதிந்து வைத்துள்ள பொருள்களே பயில்வார்க்குப் பேரின்பம் பயப்பனவாகும். இத்தகு தன்மை இந்நூலில் மிகுதியாக அமைந்து உள்ளது என்பர்.

அறமும், பொருளும் முதலிவரும் புறப்பொருள் பனுவல்களினைக் காட்டிலும் இன்பமே முதலி வருகின்ற அகப்பொருள் பாடல்களில் பெரிதும் குறிப்புப் பொருள் இடம்பெறும். இவை உள்ளுறை, இறைச்சியாகும். "உள்ளுறையாவது தலைவி, தோழி முதலியோர் தாம் கூறக் கருதிய பொருளை வெளிப்படையாகக் கூறாது குறிப்பாகக் கூறுவது ஆகும்.

Scanned with CamS

இவ் ஐங்குறுநூற்றில் அமைந்த செய்யுட்கள் அனைத்திலும், குறிப்பாக மருதப் பாடல்களில் இவ் உள்ளுறை உவமம் அதிகமாக அமைந்துள்ளது.

(எ.டு) "வாழி ஆதன் வாழி அவினி
நெற்பல பொலிக பொன்பெரிது சிறக்க
எனவேட் டோளே யாயே யாமே
நனைய காஞ்சிச் சினையச் சிறுமீன்
யாணர் ஊரன் வாழ்க
பாணனும் வாழ்க எனவேட் டோமே"

(ஐங்.வே.ப.1)

இதன்கண் தோழி தலைவனது கூடாவொழுக்கத்தினை வெளிப்படையாகக் கூறாது குறிப்பாகக் கூறுகின்றாள். அஃதாவது தலைமகனது ஊர், மணங்கமழும் காஞ்சி மரங்களையும், புலால்நாறும் சிறிய மீன்களையும் ஒருங்கே கொண்டுள்ளது. அதுபோன்று தலைமகன், புகழ் பரப்பும் குலமகளாகிய தலைவியையும் இழிதொழிலையும், சிறுமைக் குணங்களையும், உடைய பரத்தை மகளிரையும் சமமாகக் கருதி ஒழுகின்றான் என்று தோழி குறிப்பாகக் கூறுகின்றாள். இவ்வாறு உள்ளுறை உவமம் மருதப் பாடல்களில் பயின்று வருகிறது.

இளம்பூரணர், பேராசிரியர் முதலிய "தொல்காப்பிய உரையாசிரியர்கள் இவ் ஐங்குறுநூற்றுச் செய்யுட்களையே ஏனைய சங்கச் செய்யுளினைக் காட்டிலும் மிகுதியாகத் தொல்காப்பிய உரை விளக்கங்களுக்கு எடுத்துக் காட்டியிருத்தல் இந்நூலின் இலக்கண அமைதிக்குச் சான்றாகும் என்பர் பொ.வே. சோம சுந்தரனார்.

இங்ஙனம் சங்க நூல்களில் ஐங்குறுநூறு சிறப்பிடம் பெறுகிறது.

Scanned with CamS

1. கீழ்கணக்கு நூல்களில் அளவில் சிறியது எது?
   கீழ்கணக்கு நூல்களில் அளவில் சிறியது கார் நாற்பது. இதில் 40 பாடல்கள் உள்ளன.
2. கார் நாற்பது - குறிப்பு வரைக.
   கார் நாற்பது நூலின் ஆசிரியர் மதுரைக் கண்ணங்கூத்தனர். நாடகப் பாங்கில் நூல் உருவாகும் முல்லை நில முதல் கரு, உரிப் பொருள்கள் இந்நூலில் கூறப்பட்டுள்ளன. சங்கச் செய்யுள் சாயலில் இந்நூல் உள்ளது.
3. ஐந்திணை ஐம்பது நூலின் ஆசிரியர் யார்?
   மாறன் பொறையனார்.
4. களவழி நாற்பது நூலின் அமைப்பு முறை பற்றிக் கூறுக.
   களவழி நாற்பது போர்க்களம் பற்றிய நாற்பது பாடல்களைக் கொண்ட நூல் பதினெண் கிழ்க்கணக்கு நூல்களுள் புறப்பொருள் சார்ந்த ஒரே நூல் இதுவாகும்.
5. களவழி நூற்பது நூலின் ஆசிரியர் யார்?
   பொய்கையார்.
6. திருக்குறளுக்கு அடுத்ததாகப் போற்றப்படும் நூல் எது?
   நாலடியார்.
7. நாலடியார் நூலின் உள்ளடக்கம் பற்றி எழுதுக.
   நாலடியார் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என பகுக்கப்பட்டுள்ளது. இளமை நிலை யாமை, வாழ்வம் நிலையாமை, வாழ்க்கை நிலையாமை பற்றிய கருத்துக்கள் நூலின் தொடக்கத்திலும் பின்னர், வாழ்வியல் அறங்களையும் வரிசைப்படுத்திக் காட்டுகிறது.
8. நான்மடிக் கடிகையின் ஆசிரியர் யார்?
   விளம்பி நாகனார்
9. இன்னா நாற்பது - பெயர்க்காரணம் கூறுக
   துன்பம் உடையது இன்னது என 40 பாடல்களில் கூறுவதால் இன்னா நாற்பது என்று பெயர்.
10. இனியவை நாற்பது நூலின் ஆசிரியர் யார்?
    பூதஞ் சேந்தனார்
11. திருக்குறளுக்கு உரை எழுதியோர் யாவர்?
    திருக்குறளுக்கு உரை எழுதியோர் பதின்மர்
12. திரிகடுகம் என்றால் என்ன?
    சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்றும் கலந்து மருந்தின் பெயர் திரிகடுகம். இம் மூன்றலாகிய மருந்து உடல் நோயைத் தீர்ப்பது போல் ஒவ்வொரு பாட்டிலுமுள்ள மூன்று கருத்துக்கள் உள்ளத்து நோயைத் தீர்க்கும் தன்மை உடையதால் திரிகடுகம் என்று பெயர்.
13. பதினென் கீழ்கணக்கில் உள்ள முப்பெரும் நூல்கள் யாவை?
    திருக்குறள், நாலடியார், பழமொழி
14. முதுமொழிக் காஞ்சியின் ஆசிரியர் யார்?
    கூடலூர்க் கிழார்
15. ஔவையார் இயற்றிய நீதி நூல்கள் யாவை?
    ஆத்திச்சூடி, மூதுரை, கொன்றை வேந்தன், நல்வழி
16. அதிவீரராம பாண்டியர் எழுதிய நூல் எது?
    வெற்றி வேற்கை (அல்லது) நறுந்தொகை
17. பழமொழி நூலின் ஆசிரியர் யார்?
    முன்றுறை அரையனார்
18. ஏலாதியில் உள்ள பாடல்கள் எத்தனை?
    ஏலாதியில் கடவுள் வாழ்த்தைச் சேர்ந்த 81 வெண்பாக்கள் உள்ளன.

19. ஆசாரக் கோவையான் ஆசிரியர் யார்?
வெபருவாயின் முள்ளியார்.
20. இன்னிலை, சிவனை எவ்வாறு குறிப்பிடுகிறது.
"ஆக்கி அளித்தழிக்கும் கந்தழியின் பேருருவே" என குறிப்பிடுகிறது.

1. சிலம்பின் மூன்று அறங்கள் யாவை?
அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும், உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர், ஊழ்வினை உருந்து வந்து ஊட்டும் என்னும் மூன்று அறங்களாகும்.
2. தமிழின் முதல் காப்பியம் எது?
சிலப்பதிகாரம்
3. சிலம்பில் காணப்படும் நாட்டுப்புற பாடல் வடிவங்கள் யாவை?
ஆற்றுவரி, ஊசல் வரி, கந்துக வரி, அம்மானைவரி, கானல் வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் கரவை.
4. தமிழின் முதல் சமயக் காப்பியம் எது?
மணிமேகலை
5. மணிமேகலை காட்டும் சீர்திருத்தக் கருத்துகள் யாவை?
பரத்தமை ஒழிப்பு, மது ஒழிப்பு, சிறையொழிப்பு, சாதியொழிப்பு, போன்ற சமுதாய சீர்திருத்தம் கருத்துக்கள் மணிமேகலை காட்டுகிறது.
6. மணநூல் என்றழைக்கப்படுவது எது?
சீவக சிந்தாமணி
7. சீவக சிந்தாமணி எடுத்துரைக்கும் கருத்துக்கள் யாவை?
இளமை நிலையாமை, இன்பம் நிலையாமை, செல்வம் நிலையாமை போன்றவைகளை சீவகசிந்தாமணி எடுத்துரைக்கிறது.
8. வளையாபதி எவ்வகைப் பாவால் ஆன நூல்?
நாதகுத்தனார்.
9. குண்டலகேசியின் ஆசிரியர் யார்?
நாதகுத்தனார்
10. குண்டல கேசியின் மறுப்பு நூல் எது?
நீலகேசி
11. யசோதா காவியத்தில் எத்தகு உத்திகையாளப் பட்டுள்ளது?
பின்னோக்கு உத்தி
12. முத்தொள்ளாயிரம் குறிப்பு வரைக.
சேரன், சோழன், பாண்டியன் ஆகிய மூன்று மன்னர்கள் ஒவ்வொருவர் பற்றியும் 300 பாடல்கள் வீதம் மொத்தம் 900 பாடல்களில் பாடப்பட்டுள்ள நூலாதலால் இதற்கு முத்தொள்ளாயிரம் என்று பெயர்.
13. முதல் சமணக் காப்பியம் எது?
பெருங்கதை, இதில் மதலும், முடிவும் அழிய இடைப்பட்ட பகுதி மட்டுமே கிடைக்கிறது.
14. கம்பரின் வேறு பெயர்கள் யாவை?
கம்பநாடன், கம்ப நாட்டாழ்வான், கவிச்சக்ரவர்த்தி
15. கம்பராமாயணத்திற்கு கம்பர் இட்ட பெயர் என்ன?
இராமாவதாரம்.
16. பெரிய புராணம் யாரைப் பற்றிக கூறுகிறது?
சைவ அடியார்களின் வரலாறு பற்றிக் கூறுகிறது.
17. மனத்தைக் கோயிலாக்கியவர் யார்?
பூசலார், வாயிலார்

18. கண்ணப்பர் செய்த செயல் என்ன?
தன் கண்களைப் பெயர்த்து சிவனுக்கு அப்பினார்
19. தேம்பாவணி என்பதன் பொருள் என்ன?
தேனை ஒத்த பாக்களால் ஆனஅழகிய நூல் என்று பொருள்
20. வீரமாமுனிவரின் இயற்பெயர் என்ன?
கான்ஸ்டான்டியுஸ் ஜோசப் பெஸ்கி
21. சீறாப்புராணத்தின் எக்காண்டம் முற்றுப்பெறாமல் இருந்தது?
நுபுல்வந்துக் காண்டம் - இது மூன்றாம் காண்டம் ஆகும்

1. பௌத்த பக்தி இலக்கியங்கள் எவை?
மணிமேகலை, குண்டலகேசி, விம்பிசாரக் கதை, அபிதர் மாவதாரம் திருப்பதிகம், சித்தாந்தக் கொள்கை
2. திருஞானசம்பந்தருக்கு வழுங்கப்படும் பெயர்கள் யாவை?
காழி நாடுடைய பிள்ளை, பரசமய கோளரி திருஞானம் பெற்ற பிள்ளை, திராவிட சிசு.
3. நாவுக்கரசரின் திருமுறைகள் எவை?
4,5,6 – ஆம் திருமுறைகள் நாவுக்கரசரின் திருமுறைகள் ஆகும்
4. நாவுக்கரசரின் நெறி என்ன?
தாச மார்க்கம் - ஆண்டான் அடிமை நெறி
5. சுந்தரர் குறிப்பு வரைக.
இயற்பெயர் ஆரூரர். இறைவனுடன் தோழமை உறவு பூண்டிருந்தால் தம்பிரான் தோழர் எனப் படுகிறார். திரு நாவலூரில் பிறந்த தால் திருநாவலூரிள் என்ற பெயரும் உண்டு.  தோழமை உறவு இறைவனிடம் கொண்டவர்.7ம் திருமுறை சுந்தரருடைதாகும்.
6. மாணிக்க வாசகர் இயற்றிய வேறு நூல்கள் யாவை?
திருக்கோவையார். திருவெம்பாவை
7. திருமூலரின் புகழ் பெற்ற தொடர் ஒன்று கூறுக.
"ஒன்றே குலம் ஒருவனே தேவன்"
8. திருமலைப் பற்றிக் குறிபிடும் சங்க இலக்கியங்கள் எவை?
முல்லைக் கலி, மதுரைக் காஞ்சி, திருமுருகாற்சப்படை, பெரும் பாணாற்றுப்படை, பரிபாடல்.
9. பொய்கையாழ்வார் பாடிய நூல் எது?
முதல் திருவந்தாதி இதில் 100 பாடல்கள் உள்ளன.
10. கல சேகராழ் வாரின் வேறு பெயர்கள் யாவை?
கொல்லிக் காவலன், கூடல் நாயகன்
11. திருப்பாவை - குறிப்பு வரைக.
திருப்பாவை – ஆண்டாள் பாடிய, பாவை நோன்பு பற்றியது.  வைகறையில் வைணவர்களால் பாராயம் செய்யப் பெறும் சிறப்பு மிக்கது.
12. பெண்பாற் பிள்ளைத் தமிழுக்குரிய மூன்று பருவங்கள் யாவை?
கழங்கு, அம்மானை, ஊசல்
13. கலம்பகம் என்றால் என்ன?
கலம் - 12, பகம்-6, கலம்பகம்-18 18 உறுப்புகளைக் கொண்ட இலக்கிய வகை கலம்பகம் எனப்படும்.
14. தமிழ் விடு தூதின் ஆசிரியர் யார்?
அமிர்தம் பிள்ளை
15. நூற்றந்தாதி என்றால் என்ன?
100 பாடல்களரல் அந்தாதி தொடைஅமையப் பாடுவது நூற்றந்தாதி எனப்படும்.

16. நந்திக் கலம்பகம் எந்நூற்றாண்டைச் சார்ந்தது?
    9 ஆம் நூற்றாண்டைச் சார்ந்து. கலம்பகம் அமைப்பின் முதல் நூல் இதுவே ஆகும்.
17. உலா நூலில் பழமையானது எது?
    உலா நூலில் பழமையானது சேரமான் பெருமாள் நாயனார் இயற்றிய திருககைலாய ஞான உலாவாகும், ஆதியுலா, தெய்வ உலா, என்ற பெயர்களும் இதற்கு உண்டு.
18. பிள்ளைத் தமிழுக்கு மூலம் எது?
    ”குழவி மருங்கினும் கிழவதாகும்” என்னும் தொல்காப்பியத் பகுதியே பிள்ளைத் தமிழுக்கு மூலமாகும்.
19. சிற்றிலக்கியங்கள் எத்தனை?
    96
20. சிற்றிலக்கியக் காலம் எது?
    நாயக்கர் காலம் சிற்றிலக்கியக் காலமாகும்.

1. மறைமலையடிகள் யார்?
   தனித்தமிழ் இலக்கத்தைத் தோற்று வித்தவர்.
2. இரா. பி. சேதுப்பிள்ளை குறிப்பு வரைக.
   சொல்லின் செல்வர் என்று அழைக்கப்படுபவர். ஊரும் பேரும், தமிழின்பம் தமிழ் விருந்து போன்ற நூல்களை எழுதியுள்ளார்.
3. தமிழ் நாடகப் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?
   பம்மல் சம்பந்த முதலியார் தமிழ் நாடகத் தந்தை என்று அழைக்கப்படுகிறார்.
4. கவிமணி பாடல்களின் தொகுப்புக்கு என்ன பெயர்?
   மலரும் மாலையும்
5. எட்டயபுரத்து அரசவைக் கவிஞராக இருந்தவர் யார்?
   பாரதியார்
6. பாரதியாரின் முப்பெரும் காவியங்கள் யாவை?
   கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம்
7. வாணிதாசன் இயற்றிய நூல்கள் யாவை?
   தமிழச்சி, கொடி முல்லை, பொங்கற் பரிசு, இலக்கியம்.
8. சாகித்ய அகாதமி பெற்ற கண்ணதாசன் நூல் எது?
   சேரமான் காதலி
9. சிறுகதையின் ஐந்து கூறுகள் யாவை?
   தொடக்கம், வளர்ச்சி, சிக்கல், உச்சகட்டம், முடிவு
10. தமிழின் முதல் சிறுகதை எது?
    குளத்தங்கரை அரசமரம் - தமிழின் முதல் சிறுகதை ஆகும். இதன் ஆசிரியர் வ.வே.சு. ஐயர்
11. புதுமைப் பித்தன் எவ்வாறு அழைக்கப்படுகிறார்?
    தமிழ்நாட்டின் மாப்பஸான், சிறுகதை மன்னன் என்று அழைக்கப்படுகிறார்.
12. தமிழின் முதல் புதினம் எது?
    மாயூரம் வேதநாயகம் பிள்ளையின் “பிரதாப முதலியார் சரித்திரம்” தமிழின் முதல் புதினம் ஆகும்.
13. ரப்பர் புதினம் யாரால் எழுதப்பட்டது?
    ஜெயமோகன்
14. வை.மு. கோதை நாயகி குறிப்பு வரைக.
    புதின இலக்கியத்தின் தொடக்கத்திலேயே 175 புதினங்களை எழுதி வெளியிட்டவர் வை. மு. கோதை நாயகி.

15. புதுக்கவிதைக்கு உரமிட்டு வளர்த்த இதழ்கள் யாவை?
    கசடதபற, தாமரை, வானம் பாடி, தீபம், சுவடு, ஞானரதம்.
16. புதுக் கவிதையின் உத்திகள் யாவை?
    படிமம், குறியீடு, தொன்மம், இருண்மை, ஆகியன புதுக்கவிதையின் உத்திகளாகும்.
17. சிறந்த மொழிபெயர்ப்புக்கான சாகித்திய அகாதமி விருது பெற்றவர் யார்?
    சிற்பி
18. தமிழ்ச் சிறுகதைகளின் முன்னோடி எது?
    18ம் நூற்றாண்டில் வீரமாமுனிவர் எழுதிய பரமார்த்த குரு கதை தமிழ்ச் சிறுகதைகளின் முன்னோடியாகும்.
19. கட்டுரை எவ்வாறு அமைத்தல் வேண்டும்?
    சொல்வதை நிலைபேறுடையதாகவும் விவேகத்துடன், வேகத்துடனும் சொல்லும் வகையில் கட்டுரை அமைதல் வேண்டும்.

1. முச்சங்கம் பற்றிய செய்திகளைக் குறிப்பிடும் நூல் எது?
   இறையனார்களவியலுரை
2. இறையனார்களவியலுக்கு உரை எழுதியவர் யார்?
   நக்கீரர்
3. முச்சங்கம் இருந்திருக்க முடியாது எனக் கூறுவோர் யார்?
   கே.என். சிவராசபிள்ளை, பி.டி.சீனிவாச ஐயங்கார்.
4. முதல் சங்கத்தின் முதல் இலக்கண நூல் எது?
   அகத்தியம்
5. முதல் இடைச்சங்கத்தில் இருந்த புலவர் யார்?
   அகத்தியர்
6. சங்கநூல்கள் யாவை?
   பத்துப்பாட்டு, எட்டுத்தொகை
7. முதுமொழி என்பது யாது?
   பழமொழி
8. எண்பெருந்தொகை எனும் நூல் எது?
   எட்டுதொகை
9. முதலில் தொகுக்கபெற்ற எட்டுதொகை நூல் எது?
   குறுந்தொகை
10. பத்துப்பாட்டு நூல்களில் இரண்டை கூறுக?
    முல்லைப்பாட்டு
    குறுஞ்சிப்பாட்டு
11. ஆற்றுப்படை நூல்கள் எத்தனை?
    5
12. திருமுருகாற்றுபடையின் ஆசிரியர் யார்?
    நக்கீரர்
13. கலித்தொகையின் வேறு பெயர் என்ன?
    கலி, குறுங்கலி
14. தொல்காப்பியத்தின் பகுப்பு முறை பற்றிக்கூறுக?
    எழுத்து - 9 இயல்
    சொல் - 9 இயல்
    பொருள் - 9 இயல்

15. தமிழ்ல் முழுமையாக்ககிடைக்கும் இலக்கண நூல் எது?
    தொல்காப்பியம்
16. பொருநர் ஆற்றுப்படையின் ஆசிரியர் யார்?
    முடத்தாமகன்னியார்
17. பத்துப்பாட்டில் மிகச்சிறய நூல் எது?
    முல்லைப்பாட்டு
18. பத்துப்பாட்டில் அக நூல்களைக்குறிப்பிடுக?
    முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு.
19. குறிஞ்சிப்பாட்டில் குறிப்பிடபப்படும் மலர்கள் எத்தனை?
    99
20. பத்துப்பாட்டில் மிகுதியான அடிகளை உடைய நூல் எது?
    மதுரைக்காஞ்சி